நடுநிலை நின்று நற்பணியாற்றலே பத்திரிகை கடன்

Phone No 4502 — Regd. No. M. 5458

விலை அரை அணா — இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. — MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (16—2—50) ✻ வெளியூர் (17—2—50) [இதழ் 170

சமுதாய நிலையினைச் சரிவர உணர்த்தல் வேண்டும்

உள்ளதை உள்ளபடி உரைத்தலே உயரிய பணி

பத்திரிகையாளர் மாநாட்டில் டாக்டர் அழகப்பர் அறிவுரை

"பத்திரிகையாளர்கள் செய்திகளைப் பிரசுரிக்கும் போது அவற்றை பாரபட்சமற்ற முறையிலும், சரியாகவும் பிரசுரிக்க வேண்டும். அரசியலுக்கு மட்டும் முக்கியத்வம் அளித்துவிட்டு கலை, இலக்கியம், சங்கீதம் முதலிய விஷயங்களைப் புறக்கணித்துவிடக்கூடாது.

தலையங்கம் மூலம் விஷயங்களை மக்களுக்குப் போதிப்பதுடன், பத்திரிகைகளுக்குப் பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்கும் முக்கிய கடமையும் ஏற்பட்டிருக்கிறது. செய்திகளைத் தயாரிப்பதிலும் கஷ்டங்கள் உள்ளன. மக்களின் வாழ்க்கையைப் பற்றிய சம்பவங்களையும், நிகழ்ச்சிகளையும் நிருபர்கள் அனுப்ப வேண்டும். சில சந்தர்ப்பங்களில் தனிமையாக கிராமங்களிலிருந்து செய்தி அனுப்ப வேண்டியிருக்கும் போது அவர்கள் சலிப்படையக்கூடாது."

"வாழ்க்கையையும், சமூகப் போக்கையும் பிரதிபலிக்கும் விஷயங்களைப் பற்றியும் எழுத வேண்டும். நிருபர்கள் பாரபட்சமற்ற முறையிலும், விவரங்களை உள்ளது உள்ளபடியும் தெரிவிக்க வேண்டும்"

என்று திருச்சி மாவட்ட பத்திரிகையாளர் கழகத்தின் மூன்றாவது மாநாட்டைத் திறந்து வைத்துப் பேசிய டாக்டர் அழகப்பச்செட்டியார் குறிப்பிட்டிருக்கிறார்.

செய்திகளைப் பிரசுரிக்கும் விஷயத்தில் பாரபட்சம் கூடாது.

அரசியலுக்கு மட்டும் முக்கியத்வம் கொடுத்து, மற்ற விஷயங்களைப் புறக்கணித்தல் கூடாது.

பொதுமக்களின் கருத்தைத் திரட்டித் தரவேண்டும்.

மக்களின் வாழ்க்கையைப் பற்றிய சம்பவங்களைச் சேகரிக்க வேண்டும்.

கிராமச் செய்திகளைக் கூட அலட்சியம் செய்யாமல் பிரசுரிக்க வேண்டும்.

சமூகப் போக்கைப் பிரதிபலிக்கும் விஷயங்களைப் பற்றி எழுத வேண்டும்.

இவைதாம் டாக்டர் அழகப்பரின் பேச்சிலிருந்து கிடைத்திருக்கும் கருத்துரைகள். ஆனால் அழகப்பர் கூறும் இக்கருத்துரைகளை ஏற்று அதன்படி நடக்கும் ஏடுகள் உண்டாவெனில், 'இல்லை' என்ற பதிலிறுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அழகப்பர் முதலாவதாகவும், முக்கியமாகவும் குறிப்பிடும் பாரபட்சமில்லா பண்பாட்டுக்கும் இப்பாரத நாட்டுப் பத்திரிகைகளுக்கும் வெகுதூரம்! எந்த ஏட்டைப் புரட்டினாலும் தேசியத்தைப் பற்றியும், தேசியத் தலைவர்களின் பிரதாபங்களைப்பற்றிய செய்தியும் தான் காணப்படுகிறதேயன்றி மாறுபட்ட கருத்துகள் எந்த அளவில் நடமாடுகிறது என்பதை எந்த பத்திரிகையும் வெளியிடுவதில்லை. ஒரு லட்சம் பேர் கூடும் கூட்ட நிகழ்ச்சியைப்பற்றி ஒருவரிகூட எழுதாத ஏடுகள், உபந்யாசம் என்ற பெயரிலே எங்கேனும் ஓர் மூலையில் மூன்று பேர்கூடிப் பேசும் பேச்சுகளுக்குப் பெருத்த விளம்பரம் தருகின்றன.

அடுத்து, பொது மக்கள் அபிப்பிராயத்தைத் திரட்டித் தர வேண்டும் என்று குறிப்பிடுகிறார். இப்பணியும் நம் நாட்டுப்பத்திரிகைகளின் படிக்கத்திலில்லாத ஒன்று. பொது மக்கள் அபிப்பிராயத்தைத் திரட்டித் தருவதுதான் பத்திரிகைகளின் கடமை என்பதை இந்நாட்டு ஏடுகள் உணர்ந்திருந்தால், பொது மொழிப் பிரச்னையில் இந்திக்கு ஆதரவு தர முன்வந்திருக்கா. இஃதொன்றே இந்நாட்டுப் பத்திரிகைகளின் பொறுப்பற்ற தன்மைக்கோர் எடுத்துக்காட்டாகும்.

வாழ்க்கையையும், சமூகப் போக்கையும் பிரதிபலிக்கும் விஷயங்களைப் பிரசுரிக்க வேண்டுவது, பத்திரிகைகளின் கடன் என வற்புறுத்திக் கூறுகிறார் டாக்டர் அழகப்பர். ஆனால் இன்றைய பத்திரிகை உலகிற்குப் பண உலகின் பரிபக்குவங்களைப் பிரதிபலிக்க

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

ஆஸ்திரிய சமாதான உடன்படிக்கை

லண்டனில் மாநாடு

லண்டன், பிப். 15—

ஆஸ்திரிய சமாதான உடன்படிக்கைபற்றிய மாநாடு லண்டனில் கூடியிருக்கிறது. இதில் பிரிட்டிஷ், அமெரிக்க, பிரெஞ்சு, ரஷிய அயல் நாட்டு மந்திரிகளின் உதவியாளர்கள் கலந்துகொண்டிருக்கிறார்கள். சென்ற ஜனவரியில் ரஷ்யாவின் ஒத்துழையாமையினால் இம்மாநாடு முறிவடைந்தது ஞாபகமிருக்கும். சென்ற மாநாட்டில் கலந்துகொண்ட ஒரு பிரபல அமெரிக்க நிபுணர்கள் இந்த தடவை மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை.

பின்னிஷ் பார்லிமெண்டில் குண்டு வெடித்தது!

—(0)—

ரஷ்ய - பின்லந்து தகராறு முற்றுகிறது!

—(0)—

தலைவர் தேர்தலின் விளைவுகள்

லண்டன், பிப். 15—

பின்னிஷ் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான, எலெக்டரல் காலேஜ் கூடம் பூட்டப்பட்ட கதவுகளுக்குள் நேற்று நடைபெற்றது. சென்ற மாதம் ரஷ்யாவின் விருப்பத்திற்கு மாருக பாஸிவ்ஸ்கியை ஆதரிக்கும் கட்சியினர் தேர்தலில் வெற்றி பெற்றது நினைவிருக்கும். இப்பொழுது பாஸிவ்ஸ்கியே ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டால், பின்லாந்து-ரஷ்ய தகராறு வலுக்கும் என்று ஹெல்சிங்கியில் கருதப்படுகிறது.

பாஸிவ்ஸ்கி ரஷ்யாவுக்கு எதிராக போர் தொடக்க முயற்சி செய்து வருகின்றனர் என்றும், பாஸிஸம் தலைதூக்க அவர் பண உதவி செய்து வருகிறார் என்றும், யுத்த கைதிகளை வைத்து ஆதரிக்கிறார் என்றும் கம்யூனிஸ்டுகள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

நேற்றிரவு பின்னிஷ் பார்லிமெண்டில் வெடிகுண்டு வெடித்தது கம்யூனிஸ்டு பயங்கர வாதிகளின் கைவரிசையே என்று தெரிகிறது.

ரஷ்யா பின்லாந்துடன் நேச உடன்படிக்கையை ரத்து செய்துவரும் என்று அமெரிக்கச் செய்திகள் கூறுகின்றன.

உலகிலேயே மிகவும் நஞ்சுள்ள பாம்பு!

லண்டன், பிப். 15—

உலகிலேயே மிகவும் நஞ்சுள்ளதென கருதப்படும் 'புலிப்பாம்பு' 12 வருஷங்களுக்குப்பின் மீண்டும் லண்டன் உயிர் காட்சிசாலையில் இடம்பெற்றிருக்கிறது. இது ஆஸ்திரேலியாவிலிருந்து விமானத்தில் வருகையில் 20 குட்டிகளைபெற்றதாம். ஆனால் லண்டன் வந்து சேருமுன் அந்த 20ம் இறந்துவிட்டன. —ரூனோம்

கடற்படையில் :: :: காற்பங்கு பசிபிக்கில் இருக்கிறது!

பஸிபிக் பிரதேசத்தில் ரஷ்யா 60 முதல் 70 வரை சப்மரீன்களை வைத்திருக்கின்றனவென்றும், ரஷ்யா தன் கடற்படையில் கால்பங்குமேல் அப்பிரதேசத்தில் வைத்திருப்பதாகவும், ஆனால் இவைகளை அங்குள்ள அமெரிக்க பஸிபிக் கடற்படை சமாளிக்க முடியும் என்று யுனைடெட் ஸ்டேட்ஸ் கடற்படைத் தளபதி அட்மிரல் ஷெர்மான் கூறியிருப்பதாக வாஷிங்டன் செய்தி ஒன்று கூறுகிறது.

ஷெர்மான் வெளியிட்டுள்ள கருத்திலிருந்து மேற்கொண்டு அமெரிக்கக் கடற்படை பஸிபிக் பிரதேசத்தில் பலப்படுத்தப்படுமோ என்று கேட்கப்படுகிறது. பஸிபிக்கைப் பொறுத்தமட்டில் பிரிட்டிஷ் அமெரிக்க நாட்டுகளுக்குள் ஒத்துழைப்பு ஏற்பட்டிருக்கிறது.

உலக நல்லெண்ணத்தைப்பெற ரஷ்யா முயற்சி?

மாஸ்கோ ரேடியோ தரும் தகவல்

லண்டன், பிப். 15—

அணுக்குண்டு கட்டுப்பாடு விஷயமான பேச்சு வார்த்தைகளில் கலந்துகொள்ள ரஷ்யா தயார் என்ற செய்திகள், ரஷ்ய வானொலிலே தாராளமாக வெளியே அனுப்பப்படுகின்றன வென்றும், உலக அபிப்பிராயம் என்னடி இருக்கிறது என்பதை அறியவும், தன் மீது உலக நல்லெண்ணம் ஏற்படவேண்டி செய்யவும் இது ஒரு வழியாக இருக்கவே ரஷ்யா இம்மாதிரி செய்கிறதென்றும் விஷயமறிந்த விமர்சகர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

ரஷ்யாவுடன் இந்த அணுக்குண்டு விஷயமாக சமாசத்திற்கு வரும்படி ட்ரூமன் அமெரிக்கர்களால் வற்புறுத்தப்படுகிறார் என்று இங்கிலீஷ் பிரசுரித்திருக்கிறது. அணுக்குண்டை ஒழிக்க ரஷ்யா எப்போதும் தயாராகவே இருக்கிறது என்றும், ஆனால் மேற்கு நாடுகளின் யுத்த வெறியர்கள் தான் சமாசம் ஏற்பட விடாமல் தடுக்கின்றனர் என்றும் மாஸ்கோ ரேடியோ கூறுகிறது.

ஆனால் சமாசத்திற்கு ரஷியாவே முட்டுக்கட்டையாக இருக்கிறது என்று அமெரிக்க உதவி அமைச்சர் தோழர் ஜான் ஹிக்கர்சன் கூறுகிறார்.

அரசுப் பிரதிநிதி அனுப்புவதிலும் அமெரிக்காவுடன் போட்டி

கெயிரோவுக்கு தோழர் கொஸிரேவ் தூதுவராக அனுப்பப்படுவார்

லண்டன், பிப். 15—

ரஷ்யா தனது முதிர்ந்த ராஜதந்திரிகளில் ஒருவரான ஸெம்யன் கொஸிரேவ் என்பவரை, கெய்ரோவில் தூதுவராக அனுப்பியிருக்கிறது.

இவர் போட்ஸ்டாம் மாநாட்டில் கலந்துகொண்ட ரஷ்யகோஷ்டியில் இடம்பெற்றவர், இந்தத்தடவை நால்வர் மாநாட்டில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார். யுத்த சமயத்தில் லண்டனில் நேசநாட்டினருக்கு ஆலோசகராக இருந்தவர் இவர் சில காலம் மாலடோவின் அந்தரங்க காரியதரிசியாகவும் இருந்திருக்கிறார்.

யுனைடெட்ஸ்டேட்ஸும், பிரான்சும் தங்களுடைய மிகவும் திறமை வாய்ந்த ராஜதந்திரிகளைக் கெய்ரோவில் தூதுவர்களாக நியமித்ததற்குப் போட்டியாகவே, ரஷ்யா இவரைக் கெய்ரோவில் தூதுவராக நியமித்திருப்பதாகத் தெரியவருகிறது.

பிரிட்டிஷ் தேர்தல்

இம்மாதம் 23-ம் தேதி நடைபெறவிருக்கும் பொதுமக்கட் சபைத் தேர்தலுக்கு நிற்க விரும்புவோர் விண்ணப்பங்கள் தாக்கல்செய்யப்பட்டுவிட்டன.

மொத்த பதவிகள் 625. அபேட்சகர்களின் எண்ணிக்கை 1677; 28 பேர் பெண்கள்.

மாலை மணி

சென்னை 16—2—50 வியாழக்கிழமை

வேதியர் கக்கும் விஷம்

"புதிய அரசியல் உருவாகி விட்டது. மக்களின் ஜீவாதார உரிமைகள் பாதுகாப்புப்பகுதியில் 15, 16வது ஷரத்துகளில் மக்களுக்குச் சமத்துவமும், சமசந்தர்ப்பமும் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த அரசாங்கத்தில் மட்டும் இன்னும் வகுப்புவாரி பிரதிநித்வ உத்தரவு நீடிக்கிறது. இது அழகல்ல."

என்று வழக்கமாகக் கக்கும் விஷத்தை, இப்பொழுதும் கக்கியிருக்கிறார் மதுரை வைதிகர் ஏ. வைத்தியநாதய்யர். சென்னை சட்டமன்றத்தில் கவர்னர் பேச்சின் பேரில் நடந்த விவாதத்தின் போது தான் மேற்குறிக்கப்பட்டிருக்கும் விஷக்கருத்துக்கள் வைத்திய நாதய்யரால் கக்கப்பட்டிருக்கின்றன.

வகுப்புவாரி பிரதிநித்வ உத்தரவு நீடித்திருப்பது அழகாக இல்லையாம் வைத்திய நாதய்யர்வாளுக்கு! அவர் அருகதர் வரதாச்சாரியாருக்கும் அப்படித்தானாம்! அவர்களது தொண்டரடிப் பொடியாழ்வார்களாக விளங்கும் சுப்பையாக்களுக்கும் அப்படித்தான் தோன்றுகிறதாம்!

வீழ்ந்துபட்ட வகுப்புகள் என்றென்றும், வீழ்த்தப்பட்ட வகுப்புகளாகவே வைத்து வைப்பது நாட்டிற்கும் கேடு, சமூக வாழ்வுக்கும் கேடு, எதிர்கால நலத்திற்கும் கேடு என்பதைக் கண்டறிந்த நேர்மையாளரான நீதிக்கட்சியினர், இரட்டையாட்சி அரசாங்கத்தில் ஆட்சி பீடத்திலமர்ந்திருந்த காலத்தில், வீழ்த்தப்பட்டவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டி, வகுப்புவாரி பிரதிநிதித்வ முறையைக் கொண்டு வந்தனர். நூற்றுக்கு நூறு சந்தர்ப்பங்களையும், ஒரு குறிப்பிட்ட வகுப்பினரே பிறவியின் காரணமாகக் கற்பித்துக் கொண்ட ஆதிக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அனுபவித்துவந்த அக்ரமமுறையைச் சிறிது மாற்றி, வீழ்த்தப்பட்ட வகுப்பினர்க்கும் சில சந்தர்ப்பங்கள் செல்லட்டும் என்று கருதி செய்யப்பட்ட முறையின் காரணமாகத்தான், ஓரளவுக்காவது பிற்பட்ட வகுப்பினர் உயர முடிந்தது. வைத்திய நாதய்யரின் பரம்பரையினர் அரசாங்கத்தின் முக்கிய இடங்களில் அமர்ந்துகொண்டிருந்தாலும்—இருப்பதாலும், வகுப்புவாரிபிரதிநித்வ முறைச் சட்டத்தை எவ்வளவுதூரம் செத்ததாக ஆக்கமுடியுமோ, அவ்வளவுதூரம் செத்ததாக ஆக்கினர்—இன்னமும் ஆக்கிக்கொண்டிருக்கின்றனர். இப்படிப்பட்ட தொல்லைகளுக்கிடையே சர்க்கார் தொழிற் கல்வி நிலையங்களிலும், முக்கிய அரசாங்க அலுவல்களிலும் சட்டம் சிறிதளவு கடைப்பிடிக்கப் படும் காரணத்தால்தான், கொஞ்சம் போலாவது பிற்பட்ட வகுப்பினரில் முன்னேற முடிந்தது.

இந்த முன்னேற்றம் வைத்திய நாதய்யர் போன்ற வஞ்சக ஆதிக்க வகுப்பினரின் கண்களை உறுத்துகிறது. எல்லா அலுவல்களும், வாய்ப்புகளும், வசதிகளும் தங்கள் வகுப்பினர்க்கு கிடைக்காமல் போகிறதே என்ற வயிற்றெரிச்சல் தோழர் வைத்திய நாதய்யரை விஷம் கக்கச் செய்கிறது.

இன்றைய நிலையில் கல்வி நிலையங்களில், ஆசிரியர்களாக 100க்கு 80 பேர்களுக்கு மேல் வைத்தியநாதய்யர் வகுப்பினர் தான். மாணவர்களில் 100க்கு 50க்கு மேல் அவர்கள்தான். இருந்தும் வைத்திய நாதய்யர் வாளுக்குக் கோபக்கனல் கிளம்புகிறது!

ஜாதி, மதம், வகுப்பு காரணமாக சர்க்கார் வித்தியாசம் காட்டக்கூடாது. குடியரசு அமைப்புத்திட்டத்திற்கு அது மாறுபட்டது. வகுப்புவாரி பிரதிநித்வ முறையிருப்பது அழகல்ல என்று கூறுகிற வைத்தியநாதய்யர், திருவல்லிக்கேணியாரிடத்தும், மாம்பலத்தாரிடத்தும், மைலாப்பூராரிடத்தும் வகுப்புவாதத்தின் உச்சநிலை அறிகுறிகள் நடைமுறை வாழ்க்கையில் ஏராளமான அளவுக்குப் பதிந்து கிடக்கின்றனவே, அவற்றைக் காண என்மறுக்கிறார்? தங்கள் வகுப்பினர் பிறப்பின் காரணமாக ஏகபோக உரிமைகளை அனுபவித்துக்கொண்டு, பிற வகுப்பினரைத் தாழ்த்தி வரலாமாம். ஆனால்; அவர்களை மட்டும் அரசாங்கம் கவனித்து தாழ்ந்தவரை உயர்த்த முற்படக்கூடாதாம்; இதுவைத்திய நாதய்யர்கும்பலின்சித்தாந்தம்!

நாட்டில் ஜாதி, வகுப்பு, மதம் ஆகியவற்றை நிலைநாட்டி, காப்பாற்றிக் கொண்டு வரும் ஆதிக்க வகுப்பினர் மட்டும் இருந்து வருவது, வைத்திய நாதய்யருக்கு அழகாக இருக்கிறதா? ஆதிக்க வகுப்பில் பிறந்துவிட்ட காரணத்தால், பிற வகுப்பினரைத் தாழ்த்தி வரும் கொடுமைகள் அவருக்கு அழகைத் தருகிறதா? சாதி, மதம் காரணமாக நாட்டில் நிலைநாட்டப்படும் அநீதி முறைகளைக் கவனிக்க மறுத்து, வகுப்புகளுக்கு நீதி வழங்கும் வகுப்புவாரி பிரதிநித்வ முறையை வைத்தியநாதய்யர் கண்டிக்கிறாரென்றால், எவ்வளவு ஆதிக்க வகுப்பு விஷம், அவர் உள்ளத்தில் குமுறிக் கொண்டிருக்க வேண்டும்?

வேதியர் கக்கும் விஷத்தைக் கண்ட பிறகாவது பார்ப்பன தேசியத் தோழர்கள், தங்கள் வகுப்பு நலத்தை முறையல்லாத முறையிலும் காப்பாற்றிகொள்ள எவ்வளவு கவலையுடன் வேலை செய்கிறார்கள் என்பதைப் பார்ப்பனரல்லாத தேசியத் தோழர்கள் உணர்வார்கள் என்று நம்புகிறோம், உண்மையைக் கண்டறிவதிலே அக்கரை இருக்குமானால்.

பச்சையப்பன் கல்லூரி தமிழ்ப் பாராளுமன்றம்

சிறப்புக் கூட்டம்

தோழர் அண்ணாத்துரை வருகை

17—2—50 வெள்ளி மாலை 5-30 மணிக்கு பச்சையப்பன் பாராளுமன்றத்தின் சார்பில், தோழர் அண்ணாத்துரை அவர்கள் தலைமையில், 'கல்வி நிலையங்களை அரசாங்கம் ஏற்று நடத்தல்' என்னும் பொருள் குறித்து விவாதம் நடைபெறும். அதுபோது தோழர் அண்ணாத்துரை தம் கருத்தை வழங்குவார்.

ஹங்கேரிய ஸ்தானிகர் லண்டனுக்கு ஓட்டம்!

லண்டன், பிப். 15—

ஸ்டாக் ஹோமிலுள்ள ஹங்கேரிய ஸ்தானிகாலயத்தில் குழப்பமேற்பட்டிருப்பதாகவும், அங்கு ஹங்கேரிய ஸ்தானிகராக இருந்த ஜனுஸ் ஸ்சார்பின் தன் குடும்பத்துடன் லண்டனுக்கு ஓடிவிட்டதாகக் கூறப்படுவதாகவும் இங்கு செய்தி கிடைத்திருக்கிறது.

சில தஸ்தாவேஜுகளும் அங்கு மறைந்துவிருந்து காணப்படவில்லை என்று கூறப்படுகிறது. ராஜக் தூக்கிலிடப்பட்டதிலிருந்துதான் அவருடைய நண்பராக இருந்த காரணத்தினால் தனக்கும் அந்த கதி நேருமோ என்றே பயந்து அவர் தப்பி ஓடியிருக்கவேண்டும் என்று கூறப்படுகிறது. புத்தத்திற்கு முன்பு இவருக்கும் ராஜக்கும் சேர்ந்தே சிறையிலிருந்தனராம்.

குட்டி & ராவ் கம்பெனித் தொழிலாளர்கள்

7-வது நாள் வேலை நிறுத்தத்தில் 7 பேர் மருத்துவ விடுதியில்!

சென்னை, பிப். 15—

கடந்த 9ந்தேதி முதல் "உள்ளிருப்பு" வேலை நிறுத்தம் செய்து வரும் சென்னை குட்டி அண்டு ராவ் கம்பெனித்தொழிலாளர்கள் இன்னும் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். லேபர் ஆபீசர் வந்து "நீங்கள் வெளியே செல்லுங்கள், நான் சமரசம் செய்து வைக்கிறேன்" என்று கூறினர். ஆனால் தங்களுக்குச் சரியான நீதி கிடைப்பதாகத் தெரியாததால் அவர்கள் வெளியே செல்லவில்லை. இதுபற்றி அரசாங்கம் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லையெனத் தெரிகிறது. மீண்டும் ஏழு தொழிலாளர்கள் மருத்துவ விடுதிக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

அறிவுக் கதிர்!

மனிதன் இயற்கையின் பல சக்திகளை அடக்கி ஆளப்போகும் வருங்காலத்தலைவன். இவ்வுலகத்திலுள்ள மிக அழகிய பொருள்களை உருவாக்கியது மனித உழைப்பும் மனிதனின் கைத்திறனுமேயாகும். மனிதக்கற்பனையின் பலனுக்கப்பால் உலகத்திலுள்ள மற்ற எவற்றைப்பற்றியும் எண்ணிப்பார்க்கமுடியாது. ஆகவே மனிதனுக்குத் தலைவணங்குகிறேன்

—மாக்ஸிம் கார்க்கி

நிறத்திமிர் படம்பிடித்துக் காட்டப்பட்டது

ரெவஸ்காட்டின் புதிய திட்டம்

லண்டன், பிப். 15—

தென்னாப்பிரிக்காவில் நிறத்திமிர் பிரச்னையைத்தீர்க்க அங்குள்ள மக்களுடன் நேரடியான தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளக்கூடிய சர்வதேச நல்லெண்ணத்தூதுக்குழு ஒன்றை அனுப்பவேண்டும் என்று, தென்னாப்பிரிக்க இந்தியா சுதேசிகள் இவர்களுடைய உரிமைக்காக பாடுபட்டுவரும், ரெவரெண்ட்மைகேல் ஸ்காட் பாதிரியார் இங்குவந்து சேர்ந்ததும் தெரிவித்திருக்கிறார்.

தோழர் ஸ்காட் இதுபற்றி இந்தியாவின் முதல் மந்திரி பண்டிதநேருவைக் கலந்தாலோசித்து அவருடைய அங்கீகாரத்தைப் பெற்றிருக்கிறார்.

தோழர் ஸ்காட் உலக சமாதான மாநாட்டில் கலந்துகொண்டபின், இந்தியாவிலிருந்து இங்கு வந்து சேர்ந்திருக்கிறார். அவர் மேலும் கூறியதாவது:—

தென்னாப்பிரிக்காவுக்கு 1000 மைல்களுக்கப்பாலிருந்து கொண்டு இப்பிரச்னையைத்தீர்க்கசெய்யப்படும் தீர்மானங்களினால் எல்லாம் பலன் ஏற்படப்போவதில்லை. நான் சொல்லும் சர்வதேச நல்லெண்ணதூது கோஷ்டி கிளப்புகள் தொழிற்சங்கங்கள், சர்வ கலாசாலைகள் முதலிய இடங்களுக்குச் சென்று பொதுமக்களுடன் நேரடியான தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளும்.

யுவர்கள் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்று அங்குள்ளவர்களிடையே சமத்துவ மனப்பான்மை ஏற்பட பாடுபடவேண்டும்.

தோழர் ஸ்காட் இரகசியமாக தானே எடுத்த மலான் சர்க்காரின் நிறத்திமிர் விளைவுகளை வெளியிடும் ஒரு சினிமாப் படத்தை, பிரிட்டிஷ் பிலிம் இன்ஸ்டிடியூட்டில் போட்டுக் காட்டினார்.

தென்னாப்பிரிக்காவுக்கு அனுப்பப் படும் கோஷ்டிக்குத் தோழர் ஸ்காட் தலைமை வகிக்கமாட்டார் என்று தெரிகிறது. கேப்டவுன் மாநாடு வெற்றிகரமாகவே முடியும் என்று தான் எதிர்பார்ப்பதாகவும், அது எப்படி முடிந்தாலும் இக்குழு சென்றே தீரும் என்றும் அவர் குளோப்நிருபரிடம் கூறினார். இக்தூதுக்குழு எண்ணம் இந்தியாவில் நடைபெற்ற உலக சமாதானப் பிரியர்கள் மாநாட்டின் நடவடிக்கைகளிலிருந்து தனக்கு உதித்தது என்றும், பல்வேறு நாடுகளிலுள்ள பலவகுப்பினரின் பிரதிநிதிகள் இக்கோஷ்டியில் இடம்பெறவேண்டும் என்றும் அவர்கூறினர். மதத்தலைவர்களும், டெக்னிகல் நிபுணர்களும் இக்கோஷ்டியில் இருந்தால் கூட நல்லது என்று அவர் அபிப்பிராயப் பட்டார்.

உலகிலேயே நிகரற்ற மொழி தமிழ்

சென்னை, பிப். 15—

"15-நூற்றாண்டுகளுக்கு முன்பே ஸர் ஆர்தர் ஸால்டர் என்ற ஐரோப்பியர் "ஹிந்தக் கீலையில், திராவிட அம்சங்கள்" என்று எழுதிய தன்னுடைய நூலில், தமிழ் மொழி ஒன்றே உலகத்தில் சிறந்த நுணுக்கமான உணர்ச்சியையோ, சகலவுண்மையோ கூறும் இயல்புடையது என்று அவர் கூறியுள்ளார். முக்கியமாக தொன்றுதொட்டிருக்கும் தமிழ் மக்களிடையே அளவு முறையும், கேள்வி முறையும் தமிழ்மொழியின் சிறந்த கருத்தைத் தெளிவாக விளக்கும் இயல்புடையது என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இதனைத சிறந்த நூல்களில் கூட காணப்படவில்லை" என்று தோழர் டி. கே. சிதம்பரநாத முதலியார் அடையாறு கலாக்ஷேத்திரத்தின் தமிழ் அன்பர் கழகத்தில் பேசிய போது குறிப்பிட்டார்.

தெ. ஆ. மாவட்ட தி. மு. க. முதல் மாநாடு

குறிஞ்சிப்பாடியில் 26-2-50-ல் நடைபெறப் போவதாக அறிவிக்கப்பட்டிருந்த தெ. ஆ. மாவட்ட தி. மு. கழக முதல் மாநாடு எதிர்பாராத சில காரணங்களால் ஒத்திவைக்கப்பட நேர்ந்துவிட்டது. மார்ச்சு திங்கள் இரண்டாவது வாரத்தில் நடைபெறும். தேதி பின்னால் அறிவிக்கப்படும்.

—வரவேற்புக்குழுவினர்

நடுநிலை நின்று . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கச் செய்வதைத் தவிர வேறொன்றும் தெரியாது. பெரிய நகரங்களில் மந்திரிகள் பவனி வரும் காட்சியும், விருந்துண்ணும் வேடிக்கையும், மாறுக் கட்சிகளைத் தூற்றித் திரியும் மகத்துவமும் தான் பிரதிபலிக்கின்றனவேயன்றி, டாக்டர் அழகப்பர் கூறுவது போன்று மக்களின் வாழ்க்கை நிலை பிரதிபலிக்கக் காணோம். அதுபோலவே நாட்டு நிலையும் அறிய முடியாத நிலைமையிலிருக்கிறோம் நாம். இது தமிழ் நாடு, நாம் தமிழர் என்ற நினைப்பே இந்நாட்டு ஏடுகளுக்குக் கிடையாது போலும். எந்த ஏட்டைப் புரட்டினாலும், விந்திய மலைக்கு அப்பாற்பட்டப் பகுதிகள் பற்றிய செய்திகள் பிரமாதமாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறதேயன்றி உள்நாட்டு விஷயங்களுக்கு இடமே இருப்பதில்லை. இப்படிப்பட்ட நிலைமாற வேண்டும். மாற வேண்டுமானால் அழகப்பரின் அறிவுரைகளைப் பத்திரிகைகள் கடைபிடிக்கவேண்டுவது மிக மிக இன்றியமையாததாகும்.

பிரிட்டிஷ் - இந்தோனேஷ்ய மந்திரிகள் சந்திப்பு

லண்டன், பிப். 15—

இந்தோனேஷ்ய பொருளாதார மந்திரி தோழர் டிஜுவாண்டா இரண்டு நாள் லண்டனில் தங்கிவிட்டு ஹேக் வந்து சேர்ந்திருக்கிறார். இவர் பிரிட்டிஷ் பொக்கிஷ மந்திரி கிரிப்ஸையும், காமன்வெல்த் உறவு மந்திரி தோழர் நோயல் பேக்கரையும் சந்தித்துப் பேசினார். பிரிட்டிஷ் இந்தோனேஷ்ய வர்த்தக உடன்படிக்கை விஷயமான பூர்வாங்க விஷயங்களைப் பற்றி இவர் பேச்சு நடத்தினார் என்று தெரிகிறது.

இந்தோனேஷ்யாவுக்கு அமெரிக்க ஏற்றுமதி இறக்குமதிப் பாங்கி கடன் கொடுக்கவிருக்கும் தொகை சம்பந்தமான உடன்பாடு இந்த மந்திரி இந்தோனேஷ்யா திரும்பியதும் அங்கீகரிக்கப்படும் என்று தெரிகிறது. இந்தோனேஷ்ய நகரம் வாஷிங்டனுக்கு ஒரு டைரக்ட் பற்றி இந்தோனேஷ்யாவுக்கும் ஐக்கிய ஸ்டேட்ஸுக்கும் உடன்படிக்கை சீக்கிரமே கையெழுத்தாகும் என்றும், இதில் நெதர்லாந்தும் சம்பந்தப்பட்டிருக்கும் என்றும் அவர் கூறினார்.

அரைத்த மாவை அயலானிடம் கொடுத்து விட்டு அப்பத்திற்குக் காத்திருப்பதா?

அகிம்சா வீரர்களின் ஆட்சியில் அதிக இராணுவச் செலவு ஏன்?

அண்மையில் அழகு திராவிடம் காண்போம்!

மதுரையில் பொதுச்செயலாளர் முழக்கம்

(நேற்றையத் தொடர்ச்சி)

லண்டனில் தேர்தல் கூட்டம் நடைபெறுகிறது. சர்ச்சில் கோஷ்டியார் ஒரு பக்கம் தங்களது கட்சியின் போக்கை மக்களிடையே கூறிக்கொண்டிருப்பார்.

அமெரிக்காவில் ட்ரூமன் தனது பண பலத்தை எந்த மார்க்கெட்டில் போட்டு, தனது நாட்டின் செல்வாக்கை விரிவுபடுத்தலாம் என்று யோசித்துக் கொண்டிருப்பார்.

பார்மோசாதீவிலே தனக்கு ஏற்பட்ட கதியை நினைத்து சியாங்-கே-ஷேக் புலம்பிக் கொண்டிருப்பார். சிலோனில் அங்குள்ள மக்கள் தங்கள் தேசத்தின் வருங்காலத்தை எண்ணி களிப்படைந்து கொண்டிருப்பார்கள். ரஷ்யாவிலே தனதுநாட்டு மக்களின் நிலையை யோசித்துக்கொண்டிருப்பார்கள். இதே நேரத்தில் நமது கொள்கையில் விரிவான திட்டத்தை உங்களிடையே விளக்கிக்கொண்டிருக்கிறேன்.

சுதந்திர இந்தியா

இன்று, இந்தியா குடி-அரசு என்ற அந்தஸ்தை அடைந்துள்ளது கண்டு உலகமே இந்தியாவைக் கவனித்துக்கொண்டிருக்கிறது. சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற அரசியல் மாநாட்டில் அண்ணாமலைப் பிள்ளை கூட, இன்றைய சர்க்காருக்குப் பொறுப்பு அதிகம் இருக்கிறது என்று பேசி இருக்கிறார். இதே நேரத்தில் நமது நாட்டிலேயும் நமக்குப் பொறுப்பு அதிகமாக இருக்கின்றது.

மூன்று பக்கம் எதிர்ப்பு

இன்றையதினம் நமது நாட்டின் பொருளாதாரத்தை நல்ல முறையில் நிறைவேற்ற பல இடைஞ்சல்கள் இருக்கின்றன.

மதத்தைச் சீர்திருத்த முற்பட்டால், மதவாதிகளின் எதிர்ப்பு ஓர் புறம் நம்மீது வருகிறது. பொருளாதாரத்தை விளக்கினால், முதலாளிகள் நம்மீது சீறுகின்றனர். சர்க்காரின் திறமைக் குறைவை எடுத்துக் கூறினால், ஆள்வோர்கள் அடக்குமுறையை நம் மீது வீசுகின்றனர். ஆகவே நாம் மூன்று இடங்களிலிருந்து வரும் எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இந்த நிலையில் தன் நாம் நமது கொள்கைகளைச் சற்று விளக்கமாகக் கூறிவருகிறோம். ஒரு நாட்டை நிர்வாகம் செய்வதற்குச் சர்க்காருக்கு வரி மிகவும் முக்கியமானது. எனவேதான் சர்க்கார் நமது மாகாணத்தில் புகையிலை, தேயிலை, காபி, தீக்குச்சி, மிளகு, பஞ்சன் முதலிய அன்றாட வாழ்க்கைச் சாமான்களின் மீது வரி விதித்துள்ளார்கள். இந்த வரியை ஆங்கிலத்தில் 'எக்ஸைஸ்டாக்ஸ்' என்று கூறுவார்கள். மற்றும் பெரிய முதலாளிகளிடமும், வருமானமுள்ளவர்களிடமும் வருமான வரி வாங்குகிறார்கள், இதை ஆங்கிலத்தில் "இன்கம் டாக்ஸ்" என்று அழைக்கப்படுகிறது. இந்த இரண்டு வருமானத்தின் மூலம் சர்க்காருக்குக் கிடைக்கும்பணத்தை இந்த மாகாண சர்க்கார், மத்திய சர்க்காருக்கு அனுப்பிவிடுகிறார்கள்.

இதுதான் இந்த மாகாண சர்க்கார் செய்யும் மகத்தான தவறு என்று நாம் கூறுகிறோம். தொழிலாளர்கள், விவசாயிகள் குறைகள் நீங்க வேண்டுமானால், இந்தப்பணம் எல்லாம் இங்கேயே இருக்கப்பட வேண்டும். அரைத்த மாவை அடுத்த வீட்டுக்காரனிடம் தந்து விட்டு, பின்னர் அவனிடம் சென்று தோசை கேட்டுக்கொண்டிருக்கும் நிலை மாறத்தான் வேண்டும்.

மந்திரியைக் கேளுங்கள்

உங்கள் ஊரில் கல்வி மந்திரியை வரவழைத்து, அவருக்கு உபசாரம் செய்துவிட்டு எங்கள் ஊரில் ஓர் கல்லூரி கட்டவேண்டும் என்று கேட்டுப் பாருங்கள்—அவர் சொல்லுவார், உங்கள் கோரிக்கை நியாயமானதுதான். இருந்தாலும் சர்க்காரிடம் இப்பொழுது பணம் இல்லையே என்றுதான் கூறுவார். நமது மாகாணத்தில் வசூலாகும் வரிப் பணத்தை எல்லாம் மத்திய சர்க்காரிடம் கொட்டி விட்டால், பின்னர் இங்கு எப்படி வேலை செய்ய முடியும் என்று கேட்கிறேன். காங்கிரஸ் தோழர்கள் சொல்லுகிறார்கள் ராணுவ பாதுகாப்பிற்கு 175 கோடி ரூபாய் செலவாகிறதே என்று. இவர்கள்தான் அகிம்சை வீரர்களாயிற்றே கத்தி இன்றி, ரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகிறது என்று பாடியவர்களாயிற்றே! இவர்கள் ஆளும் ஆட்சியில் ஏன் இவ்வளவு ராணுவ செலவு ஏற்படுகிறது! ஏற்படலாமா?

ஒருநாட்டிற்கு ராணுவம் தேவைதான், இதுகூட அறிய முடியாத அளவு புத்தி தீட்சண்யம் அற்றவர்கள் அல்ல நாங்கள். ஆனால் முன்பு பேசியவற்றிற்கு மாறாக இன்று இவர்கள் வேலை செய்கிறார்களே என்றுதான் கேட்கிறோம்.

பஜனை மடமும் சர்க்காரும்!

தெருக்கோடியிலே பஜனை நடத்தும் பரமானந்தன், எல்லோரிடமும் சென்று, நான் பஜனை நடத்தப்போகிறேன், ஆகையால் உங்கள் வருமானத்தை எல்லாம் என்னிடம் தந்து விடுங்கள். நான் உங்களுக்குத் தேவையான உப்பு, மிளகாய் எல்லாம் வாங்கித் தருகிறேன், மீதி இருப்பதை நான் செலவுசெய்வேன் என்று கேட்டால் மக்கள் என்ன நினைப்பார்கள். போடா பைத்தியம் இவன் பஜனை செய்ய நாங்கள் பணத்தை இவனிடம் தந்துவிட வேண்டுமாம், உனக்குப் பஜனைக்கு எவ்வளவு தேவை என்று சொல், அதைத் தருவோம் என்றுதான் கூறுவார்களே தவிர, தனது வருமானத்தை எல்லாம் பரமானந்தனிடம் ஒப்படைக்கமாட்டார்கள்.

அதுபோலவேதான் மத்திய சர்க்காரிடம் இராணுவசெலவு அதிகம் ஆகிறது என்றால், ஒவ்வொரு மாகாணத்திடமும் விகிதாச்சாரப்படி இவ்வளவு தொகை என்று கேட்பதுதான் முறை, அதுதான் நீதி. இதை விடுத்து உங்கள் மாகாணத்தில் வசூலாகும் தொகையை இங்கே அனுப்பி விடுங்கள், உங்களுக்குத் தேவையான தொகையை வாங்கிக்கொள்ளுங்கள் என்று கூறும் இந்த சர்க்காருக்கும், பஜனை நடத்தும் பரமானந்தனுக்கும் என்ன வித்தியாசம் இருக்க முடியும்.

வருமானத்திற்குத் தகுந்தவாறு..!

இன்று பம்பாய் மாகாணத்தில் முதலாளிகள் அதிகமாக இருக்கின்றனர். அங்கே கேளுங்கள் அதிகமான தொகையை, பஞ்சாப் மாகாணப் பாதியாககப்பட்டுள்ளது. அதன் வருவாயை அனுசரித்து அங்கேயும் கேளுங்கள், வங்காளம் வாட்டமுற்றிருக்கிறது இதையும் கவனித்துக் கேளுங்கள். எங்கள் மாகாணத்திலே மத்தியதர வகுப்பார்தான் வாழுகிறார்கள், இதற்குத் தகுந்தாற்போல் நாங்கள் தருகிறோம் என்றால் இதில் தவறு என்ன இருக்கமுடியும்?

கடன் கேட்கும் சர்க்கார்

நமது மாகாண நிதி மந்திரி கனம் கோபால ரெட்டியார் மத்திய சர்க்காரிடம், வளமுள்ள நஞ்சைகளையும், வற்றுத நதிகளையும் காட்டி ஆறு கோடி ரூபாய் கடன் கேட்டார்கள். இதற்கு மத்திய சர்க்கார் மறுத்துவிட்டது பின்னர், வாட்டத்தோடு திரும்பி வந்த நிதி மந்திரியார் இங்கே உள்ள மக்களிடம் கேட்கிறார் பணம் பிச்சை எடுப்பது போன்று. இதைச் சொன்னால் தேசியத் தோழர்கள் கோபப்படலாம், எனவே இந்த சர்க்காரைக் கடன்கேட்கும் சர்க்கார் என்று கொஞ்சம் கண்ணியத்தோடு அழைக்கிறோம்.

டில்லிவரை.......!

இன்று நமது பிரச்சாரத்தின் வேகம் டில்லிவரை சென்றிருக்கிறது, எனவேதான் இந்த சர்க்கார் ஒன்று எங்கள் பிரச்சார வேகத்தைத் தடுக்க வேண்டும், அல்லது எங்களைப் பிடித்துஜெயிலுக்கு அனுப்ப வேண்டும் என்ற நிலையிலுள்ளனர். அன்று நாங்கள் சொன்னோம் கடவுள்களின் போக்கையும், மாதின் கொடுமைகளையும் விரிவாகச் சொன்னோம். அன்று நாங்கள் சொன்னதை இன்று சட்டசபையிலே நிறைவேற்றுகிறார்கள். அன்று "தமிழ்நாடு தமிழருக்கே"! என்றோம் நாம்! அனால் 'ஆனந்த விகடன்' எலி வளை எலிகளுக்கே என்று கேலி செய்தது அன்று அவர்களுக்குச் சொன்னோம், எலி வளை எலிகளுக்குத்தான் இருக்க முடியுமே தவிர பூனைகளுக்கல்ல என்று. எலிவளை அருகில் பூனைகள் இருந்தால் எலிகள் இருப்பது அரிது என்று சொன்னோம். இன்று நம்மைக்காட்டிலும் ஒருபடி மேலே சென்று, இன்று தேசியப் பத்திரிகைகள் தமிழ் நாடு தமிழனுக்குத்தான் என்று கனல்கக்க எழுதுகின்றன (கரகோஷம்) ஆனால் இன்று நாம் திராவிடநாடு திராவிடருக்கே என்று கூறுகிறோம். கேலி பேசுவோர், கிண்டல் சித்திரம் தீட்டுவோர் இன்னும் 5 வருடகாலத்தில் இந்த மகத்தான கொள்கையை ஆதரிக்கத்தான் போகிறார்கள். இந்த நிச்சயமான எண்ணம் எங்களிடையே இருப்பதால் தான், அந்த எண்ணத்தை மக்களிடையே தீவிரமாகப் பேசி வருகிறோம்.

நமது மாகாணம் வெறும் பஞ்சாயத்து போர்டே

இன்று ஏற்பட்டுள்ள புதிய அரசியல் அமைப்பின் மூலம் நமது மாகாணம் வெறும் பஞ்சாயத்துபோர்டாக ஆக்கப்பட்டுள்ளது. குறிப்பாக நமது முன்னாள் அமைச்சர் தோழர் ஓ பி. ராமசாமி ரெட்டியார் பதவிக்கு வந்து, இன்றுள்ள விவசாயிகளின் குறைகளை போக்க ஓர் திட்டம் கொண்டு வருகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள், இது மத்திய சர்க்காருக்குப் பிடிக்கவில்லையானால் உடனே தீர்மானம் கொண்டுவந்த மந்திரியை வீட்டிற்கு அனுப்பி, இந்த மாகாணத்தில் கவர்னர் ஆட்சியைக்கொண்டுவர முடியும் அன்று ஆங்கிலேயன் 93-வது செக்ஷன் பிரகாரம் இது போன்று ஆட்சியை நடத்தினான். இன்று இதுபோன்ற சட்டத்தை காங்கிரஸ் தோழர்கள்கொண்டுவந்துள்ளார்கள்.

அதிருப்திகொண்ட மந்திரிகள்

இன்று நேரு போனால் அவர் கட்சியில் இருந்துதிறமையாக வேலை செய்ய யார் இருக்கிறார்கள்? யாராவது இருக்கிறார்கள் என்று தேசியத் தோழர்கள் சொல்ல முடியுமா?

கொலு வீற்றிருக்கும் மந்திரிகளிடையே குமுறல் தோன்றியுள்ளது, பாராளுமன்றத்திலே நேருவீற்றிருக்க, பக்கத்திலே பட்டேல் இருக்க, மற்றைய மந்திரிகள் கவனத்தோடு கேட்க, முன்னாள் பொதுச் செயலாளர் தோழர் ஆச்சாரிய கிருபளானி சொன்னார், இந்த நாட்டை ஆளத் தெரியாத நீங்கள் இங்கிருந்து வெளியேறுங்கள் என்று. இதைவிட வேறு என்ன வேண்டும்? இந்த நிலைமை இப்படியே இருக்கும் என்ற எண்ணமா?

சைனாவில் ஒரு நேரு

இன்று இவர்களிடம் அதிகமான அளவு பத்திரிகைகள் இருக்கின்றன. கேட்டவுடன் பணம் தர முதலாளிகள் இருக்கின்றார்கள். இவர்கள் கட்சி இந்தியாவில் மிகவும் சக்திவாய்ந்ததுதான், மறுக்கவில்லை. நேரு அமெரிக்கா செல்லும்போது ட்ரூமன் தனது விமானத்தையே அனுப்பி நேருவை வரவேற்று உபசரித்தார். அமெரிக்காவில் நேருவிற்குக் கிடைக்கும் வரவேற்பைப் பார் என்று தேசியத் தோழர்கள் களித்தனர். இதுபோன்றுதான் மக்கள் தொகையிலே சைனா மிகப் பெரிய தேசம். காங்கிரசைப் போல மிகப் பெரிய கட்சி கோமிங்டாங் கட்சி, இங்கு முதலாளிகள் பணம் தருவது போன்று, சைனாவிலே சியாங்கேஷேக்கிற்கும் பணம் வரும். இங்கு தேசியப் பத்திரிகைகளின் புகழைப் போல, அங்கும் பல பத்திரிகைகள், நேருவுக்கு அமெரிக்காவில் கிடைத்தது போன்று சியாங்கேஷேக்கிற்கும், அவர் மனைவிக்கும் ராஜ உபசாரம். அமெரிக்காவின் செல்லப் பிள்ளை நேரு, அதுபோன்று சியாங் தம்பதிகள். இருந்தும் என்ன? இன்று சியாங்கின் கதி என்ன ஆயிற்று? அவர் விலாசம் என்ன என்று யாராவது சொல்லமுடியுமா? பிடித்த கோட்டையை விட்டுவிட்டு பார்மோசாத் தீவுக்கு ஓடினார் இன்று சியாங்இருந்த இடத்திலே மாசேதுங், (கரகோஷம்) இங்கு மாசேதுங் இல்லையே என்று கேட்கலாம். யார் கண்டது இவ்வளவு லட்சக்கணக்கான மக்கள் கூடியுள்ள இடத்திலே இங்கே இருக்கலாம் ஒரு மாசேதுங் (கரகோஷம்) ஜெயப்பிரகாஷ்நாராயணன் ஒரு மாசேதுங் ஆகலாம், காமராஜரே ஒரு மாசேதுங்காக ஆகலாம் (பலத்த கரகோஷம்) யார் கண்டது. உங்கள் அன்பு இருந்துவிட்டால் நானே ஒரு மாசேதுங்காகக் கூடாதா? (பலத்த கரகோஷம்) பரந்த உலகிலே மாசேதுங் இல்லாமலில்லை. எனவேதான் சியாங்கின் கதி இவர்களுக்கும் உண்டாகக் கூடாது என்பதுதான் எனது அவா?

(தொடர்ச்சி நாளை வரும்)

முத்துப்பேட்டை பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்தல்

தோழர் சோமுத்தேவர் தலைவரானார்

முத்துப்பேட்டை, பிப். 18— இவ்வூர் பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்தல் நடைபெற்றது. தோழர்கள் ஆர். எஸ். என். சோமு (தேவர்) எல். எம். எம், சைனு மரைக்காயர் இருவரும் போட்டியிட்டனர். தோழர் சோமு எழு வோட்டுகள் பெற்று வெற்றி பெற்றார். தோழர் சைனுமரைக்காயருக்கு ஆறு வோட்டுகள் கிடைத்தன.

ஏஜண்டுகளுக்கு!

20—2—1950 முதல் "மாலை மணி" உலகச் செய்திகளைத் தாங்கி பெரிய அளவில் வெளிவருவதற்கான ஏற்பாடுகள் யாவும் துரிதமாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

'மாலை மணி' ஏஜண்டுகள் தங்களுடைய பாக்கி பூராவையும் 16-2-'50குள் அனுப்பவேண்டும். அப்படி அனுப்பத் தவறும் ஏஜெண்டுகளுக்குக் கட்டாயம் பத்திரிகையைத் தொடர்ந்து அனுப்ப முடியாதென்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

"மாலை மணி" பதிப்பகத்தார்.

வேலாயுதம் கொலைவழக்கை மீண்டும் விசாரிக்க!

'அறிவு நிலைய' ஆண்டு விழாவில் அரசியலார்க்கு அறிவுரை

செயங்கொண்டம் 'அறிவு நிலைய' ஆண்டு விழா நிகழ்ச்சிகள்

செயங்கொண்டம், பிப். 14—

செயங்கொண்டம், திராவிட மாணவர்களால் நடைபெறும் 'அறிவு நிலையம்' இலவச வாசகசாலை ஆண்டு விழா 3-2-50 வெள்ளி மாலை 5.30 மணிக்கு காந்திப் பூங்காவில், அமைக்கப்பட்டிருந்த 'வீரன் வேலாயுதம்' மேடையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. தெருவெலாம் தி. மு. கழகத்தாரால் தோரணங்கள் கட்டி அலங்கரிக்கப்பட்டிருந்தன. விழாவிற்கு அழைக்கப்பட்டிருந்த தோழர் அன்பழகன் அவர்களின் சொற்பொழிவைக் கேட்க பல வட்டாரங்களிலிருந்தும் மக்கள் ஏராளமாகத் திரண்டு வந்திருந்தனர்.

தோழர் கிருட்டிணமூர்த்தி முன்மொழிய, இராமசாமி வழிமொழிய தோழர் எ. ஆரோக்கியசாமி பி. ஏ, பி. டி. தலைமை தாங்கினார். திராவிட சீர்திருத்தப் பண்கள் பாடியபின், புலவர் அரங்காமி 'மறுமலர்ச்சி' என்னும் தலைப்பில், எண்ணத்தில், எழுத்தில், பேச்சில், கதையில, கவிதையில அரும்புகின்ற மறுமலர்ச்சியின் தன்மையையும், அவசியத்தையும் விளக்கிப் பேசினார்.

அடுத்து — அறிவு நிலையத் துணைச் செயலாளர், தோழர் சடகோபன் ஆண்டு அறிக்கையைப் படித்தார். அதன்பின்- தோழர் க. அன்பழகன் எம். ஏ. நீண்ட கையொலிக்கும், ஆரவாரத்துக்கும் இடையே பேசத் தொடங்கினார். அவ்வமயம், அறிவு நிலையம் தத்தனூர் வாலிபர் சங்கம், வீரன் வேலாயுதம் படிப்பகம், தி. மு. கழகம், ஆகியவற்றின் சார்பில மாலைகள் அணிவிக்கப்பட்டன. தோழர் அன்பழகன் மாலையணிவித்தவர்களுக்கு நன்றிகூறி இன்றைய மக்கள் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள இடுக்கண்களையும் அவற்றிற்கான காரணங்களையும், அவற்றினை நீக்க, கருத்திலே ஏற்படவேண்டிய மறுமலர்ச்சியைக் குறித்தும், அத்தகைய மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்கும் பணியில் சுயமரியாதை பகுத்தறிவு இயக்கங்களின் தொண்டினைக் குறித்தும் கடவுள், மதம், சாதி, ஆகியவற்றைக் குறித்தும் சாத்திரம், புராணம் கூறுபவற்றை—நம்பியதால் ஏற்பட்ட நாசத்தைக் குறித்தும், இதிலிருந்தும், விடுதலை பெற அறிவுக் கண்கொண்டு, தன்னம்பிக்கைகொண்டு வாழ முற்பட வேண்டுமென்றும், அந்நிலையில் நம்முடைய நாடு எது வென்று உணர்ந்து நம் நாட்டை அந்நியர், சுரண்டாமல், அடிமைப் படுத்தாமல் தடுத்து உரிமை வாழ்வு வாழ வழி தேட வேண்டுமென்றும் சமத்துவமும், சம சந்தர்ப்பமும், உரிமையும், தோழமையும் நிலைக்கும்படியான, வாழ்வு கிடைக்க—நமது தென்னாடாகிய திராவிடத்தின் விடுதலைக்குப் போரிட வேண்டுமென்றும், மிகவும் விளக்கமாக 2 மணி நேரத்திற்குமேல் சொற்பொழிவாற்றினார்.

இறுதியில், தோழர் எம். பாஸ்கரன் அவர்கள், 'வீரர் வேலாயுதம்' அவர்களின் படத்தைத் திறந்துவைத்து அவரது வீரம் மிகுந்த அறிவுத் தொண்டினை விளக்கி, அவரது கொலைக்குக் காரணமான 'குற்றவாளிகள்' யாராலும் அவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்க அரசாங்கம் மறுபடியும் முயற்சிக்க வேண்டும் என்பதை வற்புறுத்தி, அப்படிப்பட்ட தீர்மானத்தை, மக்களின் பெருத்த ஆரவாரம் மிகுந்த கைத்தட்டலுடன் நிறைவேற்றி பேச்சை முடித்துக்கொண்டார்.

அதன்பின் தலைவர் உலகின் பல பகுதிகளிலும் சீர்திருத்த இயக்கங்கள் தோன்றியதையும் விளக்கி மக்களைச் சிந்தித்துப் பார்க்க கேட்டுக்கொண்டு தமது பேச்சை முடித்தார். கடைசியாக தோழர் ஆ. இராமசாமியால் நன்றி கூறப்பட்டு விழா இனிது முடிந்தது. இறுதிவரை மக்கள் கலையாது இருந்தது குறிப்பிடத்தக்கது. (க-நி)

இனி நடப்பவை

சென்னை:—சேத்துப்பட்டு, ஜெகநாதபுரம் சமூக முன்னேற்ற வாலிபர் சங்கத் திறப்பு விழா, 17—2—50 வெள்ளி மாலை 5-மணிக்கு நடைபெறும். தோழர் எஸ். பக்கிரிசாமி (முன்னூர் உரவி) தலைமையில் மேயர் தோழர் ஜெ. சிவசண்முகம் எம், ஏ, எம். எல். ஏ. திறந்து வைப்பார். தோழர்கள் எஸ். சி. சி. அந்தோனிப்பிள்ளை, க. அன்பழகன் எம். ஏ. க. மாணிக்கவாசகர் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

சென்னை:—எழும்பூர் வாசுதேவன் நகர் உயர் நிலைப்பள்ளியில் 17-2-50 வெள்ளி மாலை 6.30 மணிக்கு "திருவள்ளுவர் தினவிழா" கொண்டாடப்பெறும். தோழர் ஆர். நாராயணசாமி "வள்ளுவர் தந்ததெல்லாம்" என்னும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றுவார்.

* * *

சேலம்:— இவ்வூர் தி. மு. க. கிளையின் சார்பில் 18—2—50-ல் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, ஜி. என். இராஜு ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

வளவனூர்—இவ்வூர் உயர்நிலைப் பள்ளி தமிழ் மாணவர் மன்றத்தின் சார்பில் 18-2-50 சனி மாலை 5-மணிக்கு தோழர் க. அன்பழகன் எம். ஏ. அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

தாத்தையங்கார்பேட்டை—இவ்வூர் தி. மு. க. கிளையின் துவக்கவிழா, 19-2-50 ஞாயிறு மாலை 4-மணிக்கு நடைபெறும். தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. ஜி. பராங்குசம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

சென்னை:—புதுப்பேட்டை தி. மு. க. கிளையின் பேச்சுப் பயிற்சிக் கூட்டம், 17-2-50 வெள்ளி மாலை 6-30 மணிக்கு கழகக் கட்டிடத்தில் நடைபெறும். அதுபோது, தோழர் எஸ். டி. இராசன் தலைமையில் 'திராவிடம் என்பதேன் வேண்டும்?' என்பதுபற்றி பலர் பேசுவர்.

* * *

வேலூர்:— இவ்வூர் திருவள்ளுவர் சொற்பயிற்சிக் கழகக் கூட்டம், 19-2-50 காலை 10 மணிக்கு கழகக் கட்டிடத்தில் நடைபெறும்.

* * *

வேலூர் சேலைப்பாடி:— இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம், 19-2-50 மாலை 4மணிக்கு முருகர்முதலித் தெரு 2 என்னுள்ள இல்லத்தில் நடைபெறும்

* * *

அந்தக்குடி—19-2-50 ஞாயிறு காலை 9 மணிக்கு. மேலச் சண்முகபுரம் சினேன் உடற்பயிற்சிக் கழக மைதானத்தில் அமைந்திருக்கும் பந்தலில் "நகைச்சுவை அரசு என். எஸ். கே. நடிகர் கழகத்"தின் ஆரம்பவிழா நடைபெறும். தோழர் எம். எஸ். சிவசாமி தலைமை வகிப்பார். தோழர்கள் இரா. சு. தங்கப்பழம், கே. வெற்றிவேல் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

துறையூர் — இவ்வூர் தி. மு. கழகக் கிளையின் துவக்க விழா 19-2-50 ஞாயிறு மாலை 6மணிக்கு "அ. கி. நாராயணன் பந்தலில்" நடைபெறும். தோழர் என். கோ. பாலசுந்தரம் தலைமை வகிப்பார். தோழர்கள் இரா நெடுஞ்செழியன், எம். ஏ., ஜி. பராங்குசம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

தி. மு. கழகக் கூட்டங்கள்

18 - 2 - 50

சேலம் :— சி. பி. சிற்றரசு. ஜி. என். இராஜு

19 - 2 - 50

தாத்தையங்கார்பேட்டை (மாலை 4 மணிக்கு):— துறையூர் (மாலை 6 மணிக்கு) — இரா. நெடுஞ்செழியன், ஜி. பராங்குசம்

தூத்துக்குடி :— என். எஸ். இளங்கோ, எஸ். ஒ. வெற்றிவேல், இரா. சு. தங்கப்பழம்

அதிகப்படி நெல் குத்தவும் அரிசி தீட்டவும் புதிய வழி!

(0)

இந்திய சர்க்கார் உணவு இலாகா ஆலோசகர் செய்த பரிசோதனை

சென்னை, பிப், 15—

ஒரு அரிசி மில்லில் இருக்கும் அல்லரின் சக்கரத்தின் குழாய்களையும், என்ஜின் அல்லது "டைனமோவின்" சக்கரத்தின் குறுக்களவைச் சிறிது மாற்றினால், அதன் விளைவால் அதிகப்படி அரிசியை உடைப்பதோ, தீட்டுவதோ சாத்தியப்படுவதை சமீபத்தில் இந்திய சர்க்காரின் உணவு இலாகா ஆலோசகர் தோழர் வர்மா, சமீபத்தில் சென்னைக்கு விஜயம் செய்தபொழுது கஞ்சையிலுள்ள கோடாச்சேரியிலும், செங்கற்பட்டு ஜில்லாவைச் சார்ந்த பூந்தமல்லியிலும் விஜயம் செய்தபொழுது அங்குள்ள மில்களில் செய்து காண்பித்தார்.

சிறையிலிருப்போரும் வோட்டளிக்க வசதி

பிரிட்டனில் ஏற்பாடு

லண்டன், பிப். 15—

பிரிட்டனின் பொதுத் தேர்தலில் சிறையிலிருப்பவர்களும் தபால் மூலம் தங்கள் வோட்டுகளை அனுப்ப வசதி செய்யப் பட்டிருக்கிறது.

ராஜத்துரோகம், கிரிமினல் குற்றம் இவைகளைச் செய்த கைதிகள்தான் வோட்டுகொடுக்க உரிமை மறுக்கப் பட்டிருக்கின்றனர்.

குறைந்தகாலசிறை தண்டனையை அனுபவிப்பவர்கள் பிப்ரவரி 23உ தபால் மூலம் தங்கள் வோட்டுகளை அனுப்பிவைப்பார்.

திருச்சி மாவட்ட தி. மு. கழகம்

19—2—50 ஞாயிறு, காலை 9-மணிக்கு திருச்சி "அருணகிரி மார்க்கெட்" (என் எல். சங்கரர்) 1—1—50ல் நடைபெற்ற மாவட்ட மாநாட்டின் வரவேற்புக்குழுக் கூட்டம் நடைபெறும். அது சமயம் மாநாட்டு வரவு செலவு கணக்கு ஒப்படைக்கப்படும். ஆதலால் 5, ரூபாய் கட்டணம் செலுத்திய, வரவேற்புக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருமாறு கேட்டுக் கொள்கிறோம்,

இங்ஙனம்
ஜி பராங்குசம்
எம். என். மணி
செயலாளர்கள்
தி. மா. தி. மு. கழக மாநாடு

வட ஆற்காடு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுக்கு

பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்களோடு கலந்து பேசிய பின்னரே, மாவட்ட செயற்குழுகூட வேண்டிய நிலைமை ஏற்படுமென்றதால், 18—2—50ல் ஆரணியில் கூட இருந்த கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தோழர்கள் மன்னிக்கவும். கூட்டம் கூடும் நாள் பின்னர் அறிவிக்கப் படும்.

சி. வே. சுப்பராயன்
செயலாளர்
வ. ஆ. மா. தி. மு. கழகம்

வ. ஆ. வேலூரில் 17-2-50ல் நடைபெறுவதாக இருந்த கூட்டமும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது முடிவு பிறகு வெளியிடப்படும்.

பொதுச் செயலாளர்
தி. மு. க. தலைமை நிலையம்

யூத முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா

சர். ஏ. இராமசாமி அறிவிப்பு

லேக்ஸக்ஸஸ், பிப். 15—

முஸ்லிம் நாடுகளிலுள்ள யூதர்களின் நிலைமை குறித்து யூத காங்கிரஸும், யூத ஸ்தாபனங்களின் ஐக்கிய போரும் ஐ. நா. பொருளாதார சமூகக் கமிட்டிக்கு அனுப்பியுள்ள புகார்கள் எடுத்துக்கொள்ளப் படாதென்றும், அவை மீது எவ்வித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாதென்றும் கௌன்ஸில் தலைவர் சர். ஏ. ராமசாமி முதலியார் கூறினார்.

ஹாங்காங், பிப். 15—

இதுவரை ஐக்கிய முன்னணி அமைத்து வந்த சீனக் கம்யூனிஸ்டுகளிடையே பிளவு தோன்ற ஆரம்பித்திருக்கிறது என்ற செய்தி இங்கு கிடைத்திருக்கிறது. கம்யூனிஸ்டுகளிடையே ஒரு பகுதியினர் ரஷ்யா ஆதிக்கம் அளவுக்கு மீறிப் போவதை வன்மையாகக் கண்டிக்கின்றனர் என்று தெரிகிறது.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1